# அக்டோபர் – 16 – செவ்வாய்

### புனித எட்விஜ்

### ஆண்டவரே! உமது பேரன்பு எனக்குக் கிடைக்கச் செய்யும்: திபா. 119:41

## முதல் வாசகம் : கலாத்தியர் 5 : 1 - 6

சகோதர சகோதரிகளே!கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார் அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை என்னும் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் விருத்தசேதனம் செய்துகொண்டால் கிறிஸ்துவால் உங்களுக்குப் பயனே இல்லை. விருத்தசேதனம் செய்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும் திருச்சட்டம் முழுவதையும் கடைப்பிடிக்கக் கடமை உண்டு என்பதை நான் மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன்.திருச்சட்டம் சார்ந்த செயல்களால் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆக இயலும் நீங்கள் கிறிஸ்துவுடன் உறவற்றுப் போய்விட்டீர்கள் அருளை இழந்து விட்டீர்கள்.ஆனால் நாம் தூய ஆவியின் துணையால் நம்பிக்கையின் வழியாய் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆக்கப்படுவோம் என்னும் எதிர்நோக்கு நிறைவேறும் என ஆவலோடு காத்திருக்கிறோம்.கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழ்வோர், விருத்தசேதனம் செய்து கொண்டாலும் செய்து கொள்ளாவிட்டாலும், அவர்களுக்கு எப்பயனும் இல்லை. அன்பின் வழியாய்ச் செயலாற்றும் நம்பிக்கை ஒன்றே இன்றியமையாதது.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பு எனக்குக் கிடைக்கச் செய்யும்.

## நற்செய்தி : லூக்கா 11 : 37 – 41

அக்காலத்தில் இயேசு பேசிக்கொண்டிருந்தபோது பரிசேயர் ஒருவர் தம்மோடு உணவு அருந்தும்படி அவரைக் கேட்டுக்கொண்டார். அவரும் போய்ப் பந்தியில் அமர்ந்தார். உணவு அருந்து முன்பு அவர் கை கழுவாததைக்கண்டு பரிசேயர் வியப்படைந்தார். ஆண்டவர் அவரை நோக்கிக்கூறியது: “பரிசேயரே, நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள். ஆனால் உங்களுக்கு உள்ளே கொள்ளையும் தீமையும் நிறைந்திருக்கின்றன. அறிவிலிகளே, வெளிப்புறத்தை உண்டாக்கியவரே உட்புறத்தையும் உண்டாக்கினார் அல்லவா! உட்புறத்தில் உள்ளவற்றைத் தர்மமாகக் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அனைத்தும் தூய்மையாயிருக்கும்“ என்றார்.

**தியானம்:** உணவு அருந்துவதற்கு முன் கைகளை நன்றாகக் கழுவவேண்டும், இல்லாவிட்டால் பல நோய்கள் வருவதற்கு அதுவே காரணமாகிவிடலாம். நலமாக வாழவேண்டும் தம் வாழ்வில் அக்கறை கொண்டோர் கை கழுவாமல் உணவு அருந்தமாட்டார்கள். ஆனால் இயேசு வாழ்ந்தகாலத்தில் கை கழுவியபின்னரே உணவு அருந்தவேண்டும் என்பது பரிசேயரிடையே நிலவிய ஒருமுக்கியமான சடங்கு முறையாக இருந்தது. வெளிச் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும், சிந்ததனைகளுக்கும், நோக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காதவர்களை இயேசு கடிந்து கொண்டார். வெளிச்சடங்குகள் உள்ளத்தின் உள்ளக் கிடக்கைளை வெளிப்படுத்துவனவாக மாறவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவை பொருளற்றவையே. சிலசமங்களில் நாம் வெளிச்சடங்குகள் சரியாக நடந்துவிட்டால் எல்லாம் நலமாக நடந்து முடிந்தது எனநினைத்து மனநிறைவு அடைகின்றோம். உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுகின்ற சிந்தனைகள் தூயவையாக இருக்கவேண்டும். நலமான சிந்தனைகள் எழுகின்ற இடத்தில் பிறருக்கு நலம் பயக்கின்ற செயல்களும் வெளிப்படும். நலமான சிந்தனைகள் தூயவையாக இருக்க வேண்டும். நலமான சிந்தனைகள் எழுகின்ற இடத்தில் பிறருக்கு நலம் பயக்கின்ற செயல்களும் வெளிப்படும். நலமான சிந்தனையும், அதிலிருந்து பிறக்கின்ற நலமான செயல்களுமே நம் வாழ்விலும் துலங்கவேண்டும். என்பதே இயேசுவின் போதனையாகும். ஒரு மனிதனின் வாழ்வில் அவனது உள்ளமும், செயலும் நன்மையைக் கனிவாக ஈர்ந்ததால் தான் முழுமையான மனிதம் மலர்ந்தது என நாம் கூறலாம். மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம் வீசும். ஆமென்